அணைக்கட்டு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.திலகவதி சாரதி,BCA, அவர்களின் செயல்முறை முன்னிலை.

விடுநர்,

திருமதி.S.திலகவதி, தலைவர்,
அணைக்கட்டு ஊராட்சி மன்றம்,
அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்,
வேலூர் மாவட்டம்,

பெறுநர்,

திரு.சார்பதிவாளர் அவர்கள்
பள்ளிகொண்டா சார்பதிவகம்
வேலூர் மாவட்டம்

வ.ப.ஆ.எண். /2024 **நாள்:-22.02.2024**

பொருள்:- மனைப்பிரிவு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், அணைக்கட்டு ஊராட்சி கிராமம், புன்செய் சர்வே எண்.267/2A, இதற்கு சப்டிவிஷன்படி புதிய சர்வே எண்.267/2A1, பட்டாபடி இதன் புதிய உட்பிரிவு சர்வே எண்.267/2A1B, இதன் பூரா விஸ்தீரணம் 0.50.42 ஏர்ஸ் (அ) ஏக்கர் 1.24½ செண்ட் (அ) 5042.00 ச.மீ பரப்பளவில் அமையும் மனைபிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரைபடம் அங்கீகரித்தல் தொடர்பாக.

பார்வை:-

1. **திருமதி.கீதா க/பெ.தேவேந்திரன்** அவர்களின் பவர் ஏஜெண்ட்களாகிய **1.S.சாதிக் பாஷா த/பெ.லேட்.கே.ஷரிப், 2.M.கோவிந்தராஜ் த/பெ.லேட்.முனி ரெட்டி,** No.2/66ஏ, காமராஜ் தெரு,அரியூர், வேலூர்-632055 அவர்கள் மனு
2. வேலூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் **கடிதம் கோப்பு எண்.VLR /124USK47/128-2023, நாள்.20.01.2024**
3. அணைக்கட்டு ஊராட்சி மன்ற **தீர்மானம் எண்.84/2024 நாள்:22.02.2024**
4. அணைக்கட்டு ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணமாக **ரூ.33,000/- நாள்: 22.02.2024, இரசீது எண்.A3023**
5. அணைக்கட்டு ஊராட்சிக்கு கூராய்வு கட்டணமாக **ரூ.4,07,721/- நாள்:22.02.2024, இரசீது எண்.A3024**

உத்தரவு:- வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், அணைக்கட்டு ஊராட்சி கிராமம், **புன்செய் சர்வே எண்.267/2A, இதற்கு சப்டிவிஷன்படி புதிய சர்வே எண்.267/2A1, பட்டாபடி இதன் புதிய உட்பிரிவு சர்வே எண்.267/2A1B,** இதன் பூரா **விஸ்தீரணம் 0.50.42 ஏர்ஸ் ஏக்கர் 1.24½ செண்ட் (அ) 5042.00 ச.மீ** பரப்பளவில் அமையும் **மனை எண்கள்.1 முதல் 33** வரை உள்ள காலிமனைகள் **"கோல்டன் சிட்டி"** மனைபிரிவிற்கு பத்திர பதிவு செய்ய அனுமதி கோரி பார்வை 1-ல் காணும் கடிதம் மூலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மனை பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து வரைபடம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

தொழில்நுட்பம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **வேலூர் மாவட்டம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், உதவி இயக்குநர் எண்.03/2024 நாள்:-20.01.2024** என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் உட்பட்டு இவ்வரைபடம் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துறையில் சுற்றறிக்கையில் ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகள், மூலைமுடுக்குகள் மற்றும் பொது உபயோகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான இடத்தையும் தானபத்திரம் மூலமாக பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகள் குறித்து உறுதி செய்யப்பட்டு இறுதி ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

மேலும் அணைக்கட்டு ஊராட்சிக்கு தெருவழி மற்றும் மூலைமுடுக்கு, பொது உபயோகம், மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு **நாள் 03.01.2024, ஆவண எண்.1/12/2024** ஆவணம் முன்னிலைக்கு தானமாக **1081.3 சதுரமீட்டர்** அணைக்கட்டு ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் மனைபிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

இணைப்பு : வரைபடம் மற்றும் மனைபிரிவு நிபந்தனைகள்

பெறுநர்,

திருமதி.கீதா க/பெ.தேவேந்திரன் அவர்களின் பவர் ஏஜெண்ட்களாகிய **1.S.சாதிக் பாஷா த/பெ.லேட்.கே.ஷரிப், 2.M.கோவிந்தராஜ் த/பெ.லேட்.முனி ரெட்டி,** No.2/66ஏ, காமராஜ் தெரு, அரியூர், வேலூர்-632055

22/2/24

ஊராட்சி மன்றத்தலைவர்
அணைக்கட்டு ஊராட்சி
அணைக்கட்டு ஒன்றியம்

PRESIDENT
ANAICUT PANCHAYAT
Anaicut Union, Vellore Dt.

நகல்.

1. சார்பதிவாளர். சார்பதிவாளர் அலுவலகம். பள்ளிகொண்டா.
2. நகர் ஊரமைப்பு ஆணையர். எண்.807. அண்ணா சாலை. சென்னை, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர். வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. வட்டார வளர்ச்சி அலுவலர். அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம்.